**பணச் சந்தை**. முற்றிலும் குறுகிய கால நிதிகளுக்கான ஒரு சந்தை பணச் சந்தை எனப்படும். கையாளப்படும் பத்திரங்களின் முதிர்வு காலம் அதிகபட்சம் 1 வருடம்.

1. **பணச் சந்தையில் கையாளப்படும் கருவிகள் எவை**?

1.கருவூலச் சீட்டுக்கள் .2வணிக இரசீதுகள் 3.வைப்பு சான்றிதழ்கள்

**2. பணச் சந்தை வரைவிலக்கணம்**.

குரோத்தரின் கூற்றுப்படி, "பல்வேறு அமைப்புகள் மற்றும் நிறுவனங்கள் பணத்திற்கு நிகரான பல்வேறு ஆவணங்களைக் கையாளும் மொத்த அமைப்பிற்கான கூட்டுப் பெயராகும்."

இந்திய ரிசர்வ் வங்கி, "குறுகியகால நிதி சொத்துக்களுக்கான சந்தையே பணச் சந்தை ஆகும். மேலும் முதன்மை சந்தையில் புதிய ஆதாரங்களுக்கான பணப் பரிமாற்றத்தை எளிதாக்குகிறது. இரண்டாம் நிலை சந்தையில் ஏற்கனவே வழங்கப்பட்ட நிதி கோரிக்கைகளுக்கும் நிதி அளிக்கிறது" என வரைவிலக்கணம் வழங்குகிறது.

**3.பணச் சந்தையின் நோக்கங்கள் யாவை**?

1.குறுகிய கால உபரி மற்றும் பற்றாக்குறையைத் தீர்த்து ஒரு சமநிலை முறையை வழங்குதல்.

2.மத்திய வங்கியின் தலையீடானது நிறுவனத்தின் பணப்புழக்கத்தை பாதிக்கும் மைய புள்ளியை வழங்குதல்.

3.குறுகிய கால பணத்தை பயன்படுத்தும் பயனாளர்களுக்கு நியாயமான விலையில் உரிய பயன்பாட்டை வழங்குதல்.

**4.பணச் சந்தையின் சிறப்பியல்புகள் யாவை**?

1..குறுகிய கால நிதிச் சந்தை. 2 . முதிர்வுக்காலம் . 3. பணமாகமாற்றுவது.

4.முறையான இடமில்லை. 5.துணைச் சந்தைகள். 6.சந்தையின் பங்கு.

7.மிகவும் ஒழுங்கமைக்கப்பட்ட வங்கி முறை.

8.இரண்டாம் நிலைச் சந்தையின் தேவை

9.நிதித்தேவைமற்றும் வழங்கல். 10.மொத்த விற்பனைச் சந்தை.

11.நெகிழ்வு தன்மை. 12.மைய வங்கியின் முன்னிலை

**5.பணச் சந்தையின் சிறப்பியல்புகளை விவரி**.

1.**குறுகிய கால நிதிகள்.** பணச் சந்தையானது குறுகிய கால நிதிகளுக்கு ஒரு சிறந்த சந்தை.

2.**முதிர்வுக்காலம்**. நிதிச் சொத்துக்களின் முதிர்வுக் காலம் ஒரு ஆண்டு.

3. **பணமாக மாற்றுவது**. உடனடியாக நிதிச் சொத்துக்களை பணமாக மாற்ற முடியும். குறைந்த பரிவர்த்தனை செலவு.

4.**முறையான இடமில்லை.** பரிவர்த்தனைகள் தொலைபேசி அல்லது வாய்மொழி மூலமாக நடைபெறும்.

5.**துணைச் சந்தைகள்.** பணச் சந்தை பல துணைச் சந்தைகளின் தொகுப்பாகும்.

6.**சந்தையின் பங்கு.** மத்திய வங்கி, வணிக வங்கிகள், நிதி நிறுவனங்கள், தள்ளுபடியகம் மற்றும் ஏற்பகங்கள் பணச்சந்தையின் கூறுகளாகும்.

7.**மிகவும் ஒழுங்கமைக்கப்பட்ட வங்கி முறை**. பணச் சந்தையின் பல்வேறு பிரிவுகளுக்கும் மத்திய வங்கிக்கும் இடையே வணிக வங்கிகள் செயல்படுகின்றன.

8.**இரண்டாம் நிலைச் சந்தையின்தேவை**. நிதிச் சொத்து ஆவணங்களுக்கு இரண்டாம் நிலைச் சந்தை தேவைப்படுகிறது.

9.**நிதித்தேவை மற்றும் வழங்கல்**. குறுகிய கால நிதிக்கான தேவை மற்றும் அளிப்பும் அதிகமாக இருக்க வேண்டும்.

10.**மொத்த விற்பனைச் சந்தை**. பணச்சந்தையில் அதிகளவு வர்த்தகம் நடைபெறும். நிதிச்சொத்துக்களின் மதிப்பும் அதிகளவு இருக்கும்.

11.**நெகிழ்வு தன்மை**. நெகிழ்வு தன்மை காரணமாக இச் சந்தையில் புதிய ஆவணங்கள் அறிமுகப்படுத்தப்படும்.

12.**மைய வங்கியின் முன்னிலை**. மைய வங்கி ரொக்க இருப்பு விகிதம் வைத்துக் கொண்டு ஆவணங்ககளைத் தள்ளுபடி செய்வதன் மூலம் தேவையான நிதி வசதியையை ஏற்படுத்தித் தருகிறது.

**6.பணச் சந்தை மூலதனச் சந்தை – வேறுபடுத்துக**.

| தன்மைகள் | பணச் சந்தை | மூலதனச் சந்தை |
|---|---|---|

| | | |
|---|---|---|
| நிதியின் காலம் | ஒரு வருடம் | ஒரு வருடத்திற்கு மேல் |
| நிதி வழங்கல் | அரசின் குறுகிய காலத் தேவை மற்றும் நிறுவன நடைமுறை முதலுக்கு. | அரசின் நீண்ட காலத்தேவை மற்றும் நிறுவன நிலை முதல் தேவைக்கு. |
| வணிக ஆவணங்கள் | கருவூலச் சீட்டுக்கள் வணிகத்தாள்கள். | பங்குகள் கடனீட்டுப்பத்திரங்கள். |
| பண மதிப்பு | குறைந்தபட்ச மதிப்பு ரூ1,00,000 (கருவூலச் சீட்டு) அதிகபட்ச மதிப்பு ரூ25,00,000 (வணிகத்தாள்.) | பங்கின் குறைந்தபட்ச மதிப்பு ரூ10/- அதிகபட்ச மதிப்பு ரூ100/- |
| நிறுவனங்களின் பங்கு | மைய வங்கி, வணிக வங்கிகள். | மேம்பாட்டு வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்கள். |
| ஆவணங்கள் கிடைக்குமிடம் | இரண்டாம் நிலைச் சந்தையில் இடம் பெறாது | இரண்டாம் நிலைச் சந்தையில் இடம் பெறும் |
| உட்பிரிவு | இல்லை | முதல் நிலச் சந்தை மற்றும் இரண்டாம் நிலைச் சந்தை. |
| பரிவர்த்தனை நடைபெறும்இடம். | வாய்மொழியாக. | பங்கு மாற்றகம். |
| இடர் | குறைந்த அளவு | அதிக அளவு |
| ஒப்புறுதியளித்தல் | முதன்மைப் பணி அல்ல | முதன்மைப் பணி ஆகும் |
| ஆதிக்கம் | வணிக வங்கிகளின் ஆதிக்கம் | வங்கி அல்லாத நிதி நிறுவனங்களின் ஆதிக்கம். |

**7. பணச்சந்தையின் பங்கேற்ப்பாளர்கள் யார்**?

1.பல்வேறு நாடுகளின் அரசுகள். 2. பல்வேறு நாடுகளின் மைய வங்கிகள்.

3.தனியார் மற்றும் பொதுத்துறை வங்கிகள் . 4.பரஸ்பர நிதி நிறுவனங்கள்.

5.காப்பீட்டு நிறுவனங்கள். 6.வங்கி அல்லாத நிறுவனங்கள்.

7.இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் பாரத ஸ்டேட் வங்கி. 8.வணிக வங்கிகள்.

9.மாநில வங்கிகள். 10.பொது மக்கள்.

**8.பணச் சந்தை ஆவணங்கள் என்பது எதைக் குறிக்கும்**?

பணச் சந்தையில் கிடைக்கும் பல்வேறு ஆவணங்களே பணச் சந்தை ஆவணங்கள் எனப்படுகின்றன. 1.கருவூலச் சந்தையில் கிடைக்கும் கருவூலச் சீட்டுக்கள் 2. அழைப்பு கடன் சந்தையில் கிடைக்கும் குறுகிய கால அறிவிப்பு மற்றும் அழைப்புப் பணம். 3.இரசீது சந்தையில் கிடைக்கும் வணிக இரசீதுகள் மற்றும் உறுதிமொழிப் பத்திரங்கள்.

கூடுதல் ஆவணங்கள். 1.வணிகத்தாள்கள். 2.வைப்பு ரசீதுகள். 3.வங்கிகளுக்கு இடையிலான பங்கேற்பு சான்றிதழ்கள். 4.மீள் வாங்கல் வீத ஆவணங்கள்.

**9.கருவூல இரசீது சந்தை-குறிப்புவரைக**.

கருவூல இரசீதுகளை வாங்கும் மற்றும் விற்கும் சந்தைக்கு கருவூல சந்தை என்றுபெயர். குறிப்பிட்ட காலக்கெடுவுடன் கூடிய கடன் உறுதிப் பத்திரமே கருவூல இரசீதுகள்.

அரசாங்கம் கருவூல இரசீதின் தொகையை அதன் தவணைக் காலத்திற்குள் செலுத்திவிடும் என்ற உறுதிமொழியை அளிக்கிறது.

**10. கருவூல இரசீதின் பொதுவான இயல்புகளை விவரி**

**1.வெளியிடுபவர்** . கருவூல இரசீதுகளை அரசாங்கம் வெளியிடுகிறது.

**2.நிதி இரசீது**. அரசாங்கம் பொதுமக்களிடம் பணத்தைப் பெற்றுக் கொண்டதற்க்கு வழங்கப்படும் இரசீது.

**3.நீர்மைத்தன்மை**. கருவூல இரசீதுகளைஎளிதாக பணமாக்கமுடியும்.

4.**முக்கிய ஆதாரம்**. அரசாங்கம் பொதுமக்களிடம் பணத்தைப் பெற்றுக்கொண்டதற்க்கு கருவூல இரசீதுகள் ஆதாரமாக விளங்குகிறது.

5.**பண மேலாண்மை**. பொதுமக்கள் அரசின் கருவூல இரசீதுகளை வாங்குவதன் மூலம் பண மேலாண்மையை பாதுகாப்பாக கையாள முடியும்.

**11.கருவூல இரசீதுகளின் வகைகளை விவரி**.

கால வரையறை அடிப்படையில் கருவூல இரசீதுகள் மூன்று வகைகளாக பிரிக்கப்படுகின்றன . 1.. **91 நாட்கள் கருவூல இரசீதுகள்**. 2. **182 நாட்கள் கருவூல இரசீதுகள்**. 3. **364 கருவூல இரசீதுகள்**.

**91 நாட்கள் கருவூல இரசீதுகள்**. இவை நிலையான 4% தள்ளுபடி விகிதத்தில் வெளியிடப்படுகின்றன.

**182 நாட்கள் கருவூல இரசீதுகள்**. 182 நாட்கள் கருவூல இரசீதுகள் ஒரு வாரம் முழுவதும் வடிகட்டும் அடிப்படையில் வெளியிடப்படுகின்றன.

**364 கருவூல இரசீதுகள்**. 364 கருவூல இரசீதுகள் எவ்விகித நிலையான விகிதமும் கொண்டு வெளியிடப்படுவதில்லை.

**12.வைப்புச் சான்றிதழ்கள் பற்றி எழுதுக**.

வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களால் வழங்கப்படும் குறுகிய கால வைப்பு ஆவணங்கள். வங்கிகள் தங்களின் நிதி ஆதரங்களை உயர்த்திக் கொள்ள இவற்றை வெளியிடுகின்றன. குறிப்பிட்ட முகமதிப்பு மற்றும் முதிர்வுத் தொகையைக் கொண்டிருக்கும்.. மாற்றக்கூடிய தன்மை உடையதால் வைப்புச் சான்றிதழ்கள் மாற்றுமுறை ஆவண வைப்புச் சான்றிதழ்கள் எனப்படுகிறது.

**13.வெளியீட்டாளர்கள் எனப்படுவர் யார்**?

வணிக வங்கிகள், நிதிநிறுவனங்கள் வைப்புச் சான்றிதழ்களை வெளியிடுவதால் வெளியீட்டாளர்கள் என அழைக்கப்படுகிறார்கள்.

**14.சந்தாதாரர்கள்.** வைப்புச் சான்றிதழ்களை வாங்குபவர்கள் சந்தாதாரர்கள் ஆவர். தனி நபர்கள், கழகங்கள், அறக்கட்டளைகள், சங்கங்கள்,வெளிநாடு வாழ் இந்தியர்கள்.

**15. வைப்புச் சான்றிதழ்களின் இயல்புகள்**.

1.கால வைப்புக்கான உரிமை ஆவணம் .2.பிணையமற்ற மாற்றுமுறை ஆவணம் . 3.வட்டத்தில் வெளியிடப்படுகிறது. 4.மேல் எழுதுதல் மூலம் எளிதில் மாற்ற முடியும் 5. சலுகை நாட்கள் கிடையாது.

**16. வணிக இரசீதுகள் என்பது எதைக் குறிக்கும்**.

பொருட்களை விற்பவர் வாங்குபவர் மீது எழுதி தயாரிக்கப்படும் ஒரு ஆவணமே வணிக இரசீதுகள் எனப்படும். வணிக இரசீதுகளின் முதிர்வுக் காலம் 30 லிருந்து 90 நாட்கள் வரை இருக்கும்.

**17. வணிக இரசீதுகளின் நன்மைகள் யாவை?**

1.சுய நீர்மைத் தன்மை. .2.இருநபர்களுக்கிடையே பரிமாற்றம். .3.சரியான முதிர்வு தேதி. .4.வெளிப்படைத் தன்மை கொண்ட நடவடிக்கை..

**18. வணிக இரசீதுகளின் இயல்புகள் யாவை?**

1.வரைவாளர். 2.ஏற்றுக்கொள்பவர். 3.செலுத்தப் பெறுநர் 4. வட்டம் செய்பவர். 5.மேல் எழுதுபவர். 6.மதிப்பீடு 7.முதிர்வு . 8.கடன் தர மதிப்பீடு.

**18. வணிக இரசீதுகளின் வகைகள் யாவை?**

1.தேவை மற்றும் பயன்பாட்டு இரசீதுகள்.

2. தூய்மை இரசீதுகள் மற்றும் ஆவண இரசீதுகள்.

3.உள்நாட்டு மற்றும் அயல் நாட்டு இரசீதுகள்.

4.தனித்துவமான இரசீதுகள்.

5.இருப்பிட மற்றும் வழங்கல் இரசீதுகள்.

19.. **வணிக இரசீதுகளின் வகைகளை விவரி.**

**1. தேவை மற்றும் பயன்பாட்டு இரசீதுகள்**. பணம் செலுத்துவதர்க்கான தேதி குறிப்பிடப்படாத இரசீது, தேவை மற்றும் பயன்பாட்டு இரசீது எனப்படும். இரசீது வைத்திருப்பவர் தனக்கு பணம் தேவைப்படும்போது ரசீதுக்கு பணம் பெற்றுக் கொள்ளலாம்.

**2. தூய்மை இரசீதுகள் மற்றும் ஆவண இரசீதுகள்**. பொருட்களின் உரிமை ஆவணம் மூலம் இணைக்கப்பட்டுள்ள இரசீதுகள் ஆவண இரசீதுகள் எனப்படும். எந்த ஒரு ஆவணமும் எழுதி இணைக்கப்படாத இரசீதுகள் தூய்மை இரசீதுகள் எனப்படும்.(e.g) தொடர் வண்டி இரசீது,சரக்கு இரசீது.

**3. உள்நாட்டு மற்றும் அயல் நாட்டு இரசீதுகள்**. இந்தியாவில் குடியிருக்கும் ஒருவருக்கு இந்தியாவில் எழுதப்பட்ட மற்றும் செலுத்த வேண்டிய இரசீதுகள்.

இந்தியாவிற்கு வெளியே எழுதப்பட்டு இந்தியாவிலோ அல்லது வெளி நாட்டிலோ செலுத்தப்படும் இரசீதுகள்.

**4. தனித்துவமான இரசீதுகள்**. உள்ளூர் வர்த்தகப் பயன்பாட்டின் மூலம் நிர்வகிகப்ப்படும் இரசீதுகள் தனித்துவமான இரசீதுகள் எனப்படும்.

**5. இருப்பிட மற்றும் வழங்கல் இரசீதுகள்.** உண்மையான வியாபார நடவடிக்கைகள் அல்லாமல் உருவாக்கப்படும் இரசீதுகள் இருப்பிட மற்றும் வழங்கல் இரசீதுகள் எனப்படும்.

**20. அரசு அல்லது தங்க முனை பத்திரங்கள் சந்தை**. அரசு பத்திரங்களை வாங்கவும் விற்கவும் கூடிய சந்தை அரசு அல்லது தங்க முனை பத்திரங்கள் சந்தை எனப்படும்.

**21. அரசு பத்திரங்கள் வெளியிடுவதன் நோக்கம்**. 1.முதிர்வு அடைந்த பத்திரங்களை மீட்கவும் , 2.முதிர்வு அடையாத பதிரங்களுக்கு திருப்பிச் செலுத்தி மீட்கவும் 3.ரொக்க நிதிகளுக்காகவும், புதிய ரொக்க வளங்களை உயர்த்துவதர்க்காவும், அரசுப் பத்திரங்கள் வெளியிடப்படுகின்றன.

**22. அரசு அல்லது தங்க முனை பத்திரங்கள் சந்தையின் இயல்புகள் யாவை?**

**1.முகமை.** மத்திய அரசு,மாநில அரசு,நகராட்சிகள்,மாநகராட்சிகள், துறைமுகங்கள் போன்ற அமைப்புகள் அரசுப் பத்திரங்களை வெளியிடுகின்றன.

**2. இந்திய ரிசெர்வ் வங்கியின் சிறப்புப் பணி.** அரசுப் பத்திரங்கள் வாங்குதல் மற்றும் விற்பனையில் இந்திய ரிசெர்வ் வங்கி முக்கிய பங்கு வகிக்கிறது.

**3.பத்திரங்களின் இயல்பு.** பத்திரங்கள் அதிக பாதுகாப்பு தன்மை உடையது.

**4. பணப்புழக்க விபரம்.** அரசுப் பத்திரங்கள் அதிக நீர்மைத்தன்மை கொண்டவை. பணப்புழக்கம் அதிகமாக இருக்கும்.

**5. வரிவிலக்கு.** முதலீட்டாளர்களுக்கு வரி விலக்கு கிடைக்கும். இதனால் அரசுப்பத்திரங்கள் பிரபலம் அடைந்துள்ளது.

**6. சந்தை.** இந்தியாவில் அரசுப் பத்திரங்கள் முதல் மற்றும் இரண்டாம் நிலைச் சந்தைகளில் கிடைக்கும்

**7. படிவங்கள்.** பங்குச் சான்றிதழ்கள், உறுதி மொழி சீட்டுக்கள், மற்றும் கொணர்பவர்கள் பத்திரங்கள் போன்ற வடிவங்களில் அரசுப் பத்திரங்கள் கிடைக்கும்.

**8. பங்கேற்ப்பாளர்கள்.** ஒருங்கிணைந்தபங்கேற்ப்பாளர்களாக மத்திய மாநில அரசுகள் உள்ளன.

**9. வர்த்தகம்.** வங்கிகள் மற்றும் பெரு நிறுவனங்கள் அரசு பத்திரங்களை வாங்கி விற்பதில் ஈடுபடுகின்றன.

**10. வெளியீட்டு இயந்திரம்.** இந்திய ரிசெர்வ் வங்கியின் கீழுள்ள பொது கடன் அலுவலகம் (Public Debt Office) அரசு பத்திரங்களை வெளியிடுகிறது.

**11. அரசு பத்திர வெளியீடு தொடக்கம்.** அரசுப் பத்திர வெளியீடு தொடங்கும் முன்பத்திரங்களின் தன்மைகள் பற்றி அறிவிப்பு வெளியிடப்படும்.

**12. சீர்மைப் படுத்துதல்.** முதிர்ச்சி அடைந்த பத்திரங்களை கையகப்படுத்துதல் மற்றும் மீட்பை எளிதாக்கும் நடவடிக்கையே சீர்மைப்படுத்துதல் ஆகும். RBI இதை மேற்கொள்கிறது.

**13. மாற்றம்.**ஒரு பத்திரத்தினை வாங்குவதற்காக மற்றொரு பத்திரத்தினை விற்பனை செய்ய RBI இரண்டாம் நிலைச் சந்தையில் மேற்கொள்ளும் சந்தை நடவடிக்கையே மாற்றம் ஆகும்.

**14. ஏலம் விடுதல்.** வர்த்தகர்கள் ஒருவர் ஒருவரோடு போட்டியிடும் முறையில் பத்திரங்களை அதிக விலைக்கு விற்கும் வர்த்தக முறையே ஏலம் விடுதல் ஆகும்.

**23. பழமையான பணச் சந்தை.** லண்டன் பணச் சந்தை உலகின் பழமையான மிகவும் வளர்ந்த மற்றும் முன்னணி பணச் சந்தை ஆகும்.

நியூயார்க் பணச் சந்தை இரண்டாவது நன்கு வளர்ந்த சந்தை.